# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15


**VOLUME - 8  Reg No.TNBIL/2016/70171  ISSUE - 3**
**MARCH 2024 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/=  FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




கர்த்தருக்குள் அன்பானவர்களே, வாழ்த்துகிறேன்.

கடந்த 2024 ஜனவரி மாத ஜாமக்காரனில் **அன்னிய பாஷை குழப்பம்** விவரம் தொடர்ச்சியை இனி ஒவ்வொரு மாதமும் அன்னிய பாஷையை பற்றிய மற்ற விவரங்களும் பலரின் கேள்விக்கான பதிலும் எழுதிவைத்துள்ளேன்.

ஆனால் அதற்குள் **தமிழ்நாட்டு கிறிஸ்தவர்கள்** எல்லாருக்கும் **அவமானத்ததை** உண்டாக்கும் **இயேசு அழைக்கிறார்** குடும்பத்தை நாற்றமெடுக்க செய்யும் பேச்சுக்கள் இயேசு அழைக்கிறார் பால்தினகரன் மனைவி **சைபர் பேலன்ஸ் இவான்ஜலின்** அவர்களின் வீடியோ & YOUTUBEல் பேச்சுக்கள் **தமிழ்நாடு**, கேரளம், **உலக நாடுகள்** யாவிலும் தீபோல பரவி லட்சக்கணக்கான மக்கள் தொலைபேசியிலும், கடிதத்திலும் e-mail லிலும் என்னிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டு என் காதே புளித்துவிட்டது. அந்த பெண் இவ்வளவு **கீழ்தரமாகவும்** துணிகரமான **பொய்களையும்** அள்ளி கொட்டுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

**MARCH - 2024**

நான் வெகு காலத்துக்கு முன்பே ஜாமக்காரனில் இவர்களைப்பற்றி பல விஷயங்களை எழுதினேன். யாரும் கவனித்ததாக தெரியவில்லை. ஆனால் இப்போது **புறமதஸ்தர்,** RSS, BJP கட்சியை சேர்ந்தவர்கள் **துண்டு பிரதிகளை அச்சடித்து** ஒவ்வொரு CSI ஆலயத்துக்கு முன்பு நின்று கொண்டு **உங்கள் கிறிஸ்தவத்தை** பாருங்கள். உங்கள் **தெய்வத்தின் லட்சணத்தை** பாருங்கள் என்று எழுதியுள்ளார்கள். இவைகளுக்கு **என்ன பதில்** சொல்லப்போகிறீர்கள்? என்று பலவாறு இழிவாக எழுதியும் **யூடியூப்பில் நக்கீரன்** போன்ற பல பத்திரிகைகளும் **இயேசு அழைக்கிறார்** ஊழியத்தைப்பற்றியும் தினகர் அவர்களின் மருமகளான **இவான்ஜலினை** பற்றியும் மிக மோசமாக பேசியும், எழுதியும் கிழி கிழின்னு கிழித்துவிட்டனர்.

பல **ஆயர்களும்** ஊழியர்களும் **பிஷப்மார்களும்** என்னிடம் நடந்த விவரங்களைப்பற்றி பேசினார்கள். நீங்கள் ஒருவர்தானே **சகோ. தினகரன்** அவர்களை **வானொலியில் பேச வைத்தது.** அவர் பாடல்களை முதன்முதலாக **பதியவைக்க ஏற்பாடு செய்து** வெளியிட்டு உதவுனீர்கள். அவருடைய குடும்ப விவரங்களையும் மகன் **பால்தினகரனின்** விவரங்களையும் 1970 முதல் அறிந்தவர் நீங்கள் மட்டுமே!

இப்போது நடந்துகொண்டிருக்கும் **மருமகளின்** பேச்சுக்களையும், உண்மை நிலையையும் நீங்கள் மட்டும் தெளிவாக எழுத முடியும். நாடே **ஜாமக்காரனில்** மருமகள் **இவான்ஜலின்** பற்றிய செய்திகளை எப்போது வெளியிடுவீர்கள் என்று ஒரு வெறியோடு காத்திருக்கிறார்கள். மக்கள் **ஊழியர்களை கதாநாயகர்களாக்கி** அவர்களை **பணத்தால் குளிப்பாட்டியவர்களின் புத்தி தெளிய** முழுவிவரங்களை எழுதுவீர்கள் ? என்று எதிர்பார்க்கிறோம் என்று கேட்டதால் இந்த மாதம் **சைபர் பேலன்ஸ்** அம்மையார் **இவான்ஜலின் பால்** அவர்களின் ஸ்பெஷல் வெளியீடாக வெளியிட கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறேன். ஜெபிக்கிறோம்.

**Dr. புஷ்பராஜ்**

## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# இயேசு அழைக்கிறார் VS சைபர் பேலன்ஸ் இவான்ஜலின்

**இயேசு அழைக்கிறார்** ஊழியம் அழிய அதன் ஸ்தாபகர் சகோ. D.G.S. தினகரன் மட்டுமே மூலக்காரணராகும்

**இயேசு அழைக்கிறார்** ஊழியம் அதன் ஸ்தாபகர் சகோ. **D.G.S. தினகரால் அழிய ஆரம்பித்தது**. மருமகள் **இவான்ஜலின் பால்** கூறிய பொய்களால் இயேசு அழைக்கிறார் ஸ்தாபனம் அழவின் முடிவுக்கு வந்தது.

2024ம் வருடம் இயேசு அழைக்கிறார் ஊழியத்தைப்பற்றி விதவிதமான செய்திகள் வெளிவந்ததால் இயேசு அழைக்கிறார் ஊழியத்தை மக்கள் வெறுக்க ஆரம்பித்தார்கள் என்று கேள்விப்படும்போது இயேசு அழைக்கிறார் ஊழியத்தின்மேல் மக்கள் எத்தனையாய் நம்பிக்கை வைத்து வெறுக்க ஆரம்பித்துவிட்டனர் என்று விளங்குகிறது.

## இயேசு அழைக்கிறார் அழிவின் கிளைமாக்ஸ்

☐ **என்ன நடந்தது?**

சகோ. தினகரன் அவர்கள் **தன் மகள்** கார் விபத்தில் மரித்தவுடன் **மகளை போலவே** உருவம்கொண்ட ஒரு மருமகள் எனக்கு தேவை என்று கர்த்தரிடம் கேட்டாராம், பல பெண்கள் பார்க்கப்பட்டது, **மதுரையில்** ஒரு நல்ல பெண்ணின் குடும்பத்திடம் கர்த்தர் எனக்கு காட்டிய பெண் உங்கள் மகள்தான் என்றார். ஏறக்குறைய திருமண சம்மதம் பேசிவிட்டார்கள். **ஆனால் கலியாண செலவின்** கணக்கை **தினகரன்** அவர்கள் **பட்டியலிட்டு அவர்களிடம் காட்டியபோது,** அந்த சகோதரர் மனம்வெதும்பி போனார். **நிச்சயதார்த்தம் நின்றது,** நிச்சயிக்க ஆயத்தமாயிருந்த மணப்பெண் (டிப்ரஷன்) **மன அழுத்தத்தால்** சுமார் ஒரு மாதம் மன நோய் டாக்டரின் சிகிச்சையிலிருந்தார். தோல்வி, ஏமாற்றம் தாங்காமல் வியாதியுற்றாள்,

கடைசியாக **கர்த்தர் காட்டினார்** என்று மற்றொரு பொய்யை கூறி **பாளையம் கோட்டையில்** பஸ் டயர்களை ரீட்ரேட் செய்யும் தொழில் செய்பவரின் மகளை தேற்வு செய்தார், திருமணம் **ராஜ குடும்பத்தின் திருமணம்** போல **பால் தினகரனுக்கும் – இவான்ஜலினுக்கும்** நடைபெற்றது.

அன்றிலிருந்து **இயேசு அழைக்கிறார்** குடும்பம் கூறும் **பொய்களையும் பொய் சாட்சிகளையும்** பொய் தரிசனங்களையும் மருமகள் பின்பற்றி தேறியதால் அவரையும் ஊழியத்தில் இறக்கினார்கள். அவர்தான் **சைபர் பேலன்ஸ் இவான்ஜலின்** ஆகும்.

ஆனால் சகோ. **DGS தினகரன் மனைவிக்கு** இப்படிப்பட்ட பொய் ஊழியத்தில் ஒப்புதல் இல்லை. ஆகவே **அவர் ஒதுக்கப்பட்டார்,** மருமகள் **இவான்ஜலினுக்கும் – மாமியாருக்கும்** ஆரம்பத்திலேயே **ஒத்துப்போகவில்லை.** வெளி தோற்றத்தில் ஒன்றாக அமர்ந்து போட்டோ எடுத்து இயேசு அழைக்கிறார் பத்திரிகையில் வெளியிட்டாலும் பணிப்போர் வீட்டுக்குள் ஆரம்பித்தது,

இயேசு அழைக்கிறார் ஊழியம் அவமானப்படவும் கர்த்தரை விட்டு விலகவும், கர்த்தரின் நாமம் தூஷிக்கப்படவும் முதல் காரணம் சகோ. **DGS தினகரன்** மட்டுமே என்றால் அது மிகை ஆகாது. 1970ம் வருடம் முதல் நாங்கள் (சகோ. தினகரனும், நானும்) இருவரும் ஒன்றாக ஊழியத்துக்கு போவோம், (அந்த காலத்தில் காரில் எல்லாம் பயணம் செய்யாமல் தமிழ்நாடு அரசாங்க பஸ், **திருவள்ளுவர் எக்ஸ்பிரஸில்தான்** பயணம் செய்வோம். கூட்டங்களில் முதல் இரண்டு நாள் நான் பிரசங்கம் செய்வேன் அடுத்த 2 நாட்கள் சகோ. தினகரன் பிரசங்கம் செய்வார்.

## எங்களின் முதல் சந்திப்பு

ஆரம்பகாலத்தில் சகோ. **லைனல்** (BDO), (கினத்துகடவு) சகோ. **எட்வர்டு பால்,** சகோ. **பென்னி** (கல்லூரி பேராசிரியராக இருந்தார்) இவர்களும் சகோ. DGS தினகரன் யாவரும் **கோயமுத்தூர்** காந்திபுரம் **பாஸ்டர் லெம்யூர்** என்பவரின் சபையின் அங்கத்தினராகும், இதில் சகோ. தினகரன் **மேட்டூர்** SBI வங்கியில் **அக்கவுண்டன்ட்டாக** பணி மாற்றம் உண்டானது, சிறிய வங்கியில் அக்கவுண்டண்ட்தான் **பேங்க் மேனேஜர்** என்ற அதிகாரம் தற்காலிகமாக கொடுக்கப்பட்டது,



அனேக வருட இடைவேளைக்கு பிறகு நானும், லைனல், பென்னி, சகோ. எட்வர்ட்டு பால் ஆகிய நான்கு பேரும் மாதம் இரண்டு முறை கிராமங்களில் **தெரு பிரசங்கம்** செய்வோம். ஒரு மைக் சின்ன ஸ்பீக்கர் பாக்ஸ் வைத்து **பாடல் பாடி** கூட்டம் சேர்ந்தபின் **சுவிசேஷம் அறிவிப்போம்,**

ஒருமுறை **மேட்டூர்** அருகே **அம்மாப்பேட்டை – குறிச்சிக்கும்** இடையே **வீதியில் மூன்று ரோடுகள்** சேரும் மூலையில் பாட்டு பாடி சுவிசேஷம் அறிவித்துக்கொண்டருந்தோம். அந்த கூட்டத்தில் அன்று பலர் **சுகம்** பெற்றனர். பலர் **இயேசுவை ஏற்றுக்கொண்டனர்,**

திரளான கூட்டம் கூடியிருந்தது, அப்போது அந்த வழியாக டாக்சியில் வந்த **சகோ. தினகரன்** கூட்டத்தை கவனித்து கூட்டம் முடிவு வரை நின்று பின் எங்களிடம் வந்து ஒரு கிட்டார், ஒரு டப்பா வைத்து **அதை இசை கருவியாக்கி** இத்தனை பெரிய கூட்டத்தை கூட்டி சுவிசேஷம் அறிவித்த உங்களோடு **நானும் இணைந்து** கொள்ளலாமா என்று கேட்டு அன்றுதான் அவர் எங்களோடு இணைந்தார். எங்கள் **ஐக்கியம்** பெலப்பட்டது. எங்கள் பிரசங்கத்தை விட **சகோ. தினகரன்** பிரசங்கத்தில் **பெரிய அசைவு** உண்டானது. அவரின் **பாடலுக்கு** ஒரு **காந்த சக்தி** இருந்தது. மக்கள் அழுது தங்களை ஒப்புக்கொடுத்தனர்.

அந்த காலத்தில் 1965ம் வருடமே FEBA **வானொலியில்** நான் **பிரசங்கம்** செய்து கொண்டிருந்தேன். **சகோ. தினகரன்** தானும் **வானொலியில்** பேச ஏற்பாடு செய்ய முடியுமா? என்றார். நானும் அதற்கான ஏற்பாடுகளை செய்தேன்.

**பெங்களூர்** FEBA **வானொலி நிலையத்தில்** அந்த காலத்தில் சகோ. **விக்டர் ஞானராஜ்,** சகோ. **வீரராஜ்** ஆகியவர்கள் **ரிக்கார்டிங்** பொறுப்பில் இருந்ததால் உடனே **சகோ. தினகரன்** 12 நிமிட செய்தியளிக்க ஏற்பாடு செய்தார்கள், நான்தான் வானொலியில் ஆரம்ப நிகழ்ச்சியை பற்றி அறிமுகம் செய்து நானே பாட்டும் பாடுவேன் **சகோ. தினகரன்** செய்தி மட்டும் கொடுப்பார். **முடிவு ஜெபம்** நான்தான் செய்து நிகழ்ச்சியை முடிப்பேன்.

ஆனால் அந்த வானொலி நிகழ்ச்சிக்கு **பெயர் கொடுக்கப்படாததால்** சகோ. தினகரன் பதிவு செய்த 6 மாத **செய்திகளை** ரேடியோவில் வெளியிடாமல் நிறுத்திவைத்திருந்தனர்.

## இயேசு அழைக்கிறார் என்ற பெயர் வைக்கப்பட்ட நிகழ்வு

ஈரோடு **பிரப் நினைவு** CSI ஆலயத்தினர் **மைதானத்தில்** ஒரு பெரிய கூட்ட ஏற்பாடு செய்து **எங்களை குழுவாக** கூட்டத்தில் பேச ஏற்பாடு செய்திருந்தனர். கூட்ட மேடையில் முன்னால் சகோ. **தினகரனும், நானும்,** Rev. **எபிநேசர்** அவர்களும் அருகே ஒன்றாக அமர்ந்திருந்தோம். பின்னால் எங்கள் குழுவினர் பாடல் பாடி கொண்டிருந்தனர். **அப்போது** சகோ. தினகரன் என்னை மெதுவாக அழைத்து, டாக்டர், பின்னால் கட்டப்பட்ட **நீல நிற திரையையும்** அதில் **எழுதப்பட்டிருப்பதையும்** கவணித்தீர்களா? என்றார்.

அந்த திரையில் **இயேசு அழைக்கிறார்** என்று எழுதப்பட்டிருந்தது. இந்த பெயரையே நாம் நம் **வானொலி நிகழ்ச்சிக்கு** வைத்து அதே பெயரில் நம் ஆவிக்குரிய பொது **கூட்டங்களை** ஏன் நடத்தக்கூடாது? என்றார். உடனே **நல்லது** அப்படியே வைப்போம் என்றேன்.

உடனே **சகோ. தினகரன்** என் கையை பைபிள் மீது வைத்து **தன் கையை** என் **கையின் மேற்புறத்தில்** வைத்து இந்த **இயேசு அழைக்கிறார்** என்ற பெயரை உம்முடைய

நாமம் **மகிமைப்பட வானொலி** நிகழ்ச்சிக்கு மட்டுமல்ல **பத்திரிகை, கூட்டங்கள்** யாவற்றுக்காகவும் **பிதா குமாரன் பரிசுத்தாவியானவரின்** நாமத்தில் **இயேசு அழைக்கிறார் என்ற பெயரை பிரதிஷ்டை** செய்கிறோம் என்று ஜெபித்து முடித்தோம். நாங்கள் இருவரும் ஜெபித்ததை அருகில் இருந்த **ஆயரும் கவனிக்கவில்லை,** பின்னால் அமர்ந்திருந்த **Mrs ஸ்டெல்லா தினகரனும் கவனிக்கவில்லை.**

இப்படித்தான் **இயேசு அழைக்கிறார்** என்ற பெயர் ஈரோடு **பிரப் CSI சபையினர்** பேனரில் எழுத நாங்கள் **அந்த பெயரையே** ஊழியத்துக்காக பிரதிஷ்டை செய்து **அரசாங்க பதிவும்** செய்துவிட்டோம். அதன்பின் நடந்த அனைத்து கூட்டங்களும் **இயேசு அழைக்கிறார்** என்ற பெயரிலே நடத்தப்பட்டது. பத்திரிகையையும், இயேசு அழைக்கிறார் என்ற பெயரிலேயே தொடங்கினோம்.

அதன்பின் நடந்த சம்பவங்கள் யாவும் வாசகர்கள் அறிந்ததே ! அதன்பின் இயேசு அழைக்கிறார் கூட்டங்களுக்கு லட்சக்கணக்கில் மக்கள் கூட தொடங்கினார்

## **புது உபதேசம்** ஆரம்பிக்கப்பட்டது **தினகரின் விழுகையும்** தொடங்கியது.

திடீரென்று சகோ.தினகரன் கூட்டங்களில் **மரித்த ஆவிகளை பற்றி** பேச ஆரம்பித்தார். இந்த கூட்டத்தில் சமீபத்தில் யார் வீட்டிலாவது மரணம் சம்பவித்திருந்தால் அந்த குடும்பத்தில் **யாராவது ஒருவர்** மேடைக்கு வரும்படி கேட்டுக்கொள்வார். **நான்தான்** அவர்கள் குடும்ப மரணவிவரங்களை முதலில் கேட்டு **அவர்களை வரிசைப்படுத்தி** நிற்கவைப்பேன். ஒவ்வொருவராக அவர் மைக் அருகே அழைத்து அவர் **கணவர் எப்படி மரித்தார்.** அவரோடு அவருடைய வாழ்க்கை சந்தோஷமாக இருந்ததா ? அவர் **எந்த விதமான வியாதியல் மரித்தார்** என்பதையும் கூறி நான் கூறியது உண்மை தானா ? என்பதை கேட்டு பதிலை மைக்கில் கூறசெய்வார் அவள் அழுது கொண்டே கூறியது அத்தனையும் அப்படியே உண்மை. ஐயா குறிப்பிட்டு சொன்ன **வியாதியில்தான் என் கணவர் மரித்தார்** என்று கதறி கதறி அழுவார். அதோடு நிற்காமல் அந்த பெண்ணை பார்த்து மரித்த **உன் கணவர்** இப்போது எங்கேயிருக்கிறார் என்பதை **கர்த்தர் எனக்கு காட்டுகிறார்** என்று கூறி அவர் இப்போது **நரகத்தில் வேதனை அனுபவித்துக்** கொண்டிருக்கிறார் என்று கூற கூடியிருந்த மக்கள் கூட்டம் மட்டுமல்ல சுற்றிலும் நிற்க்கும் **எங்களுக்கும் பெருத்த அதிர்ச்சியும்** ஆச்சரியமுமாயிருந்தது. அதன்பின் இரண்டு கூட்டங்ளில் மரித்தவர்களை குறித்து ஜெபத்தில் பேச தொடர்ந்து பேசினார்.

எங்கள் குழுவில் சகோ.தினகரனோடு **தைரியமாக** பேச கூடியவர் இரண்டு பேர் ஒன்று **நான்** மற்றவர் சகோ. **எட்வர்ட் பால்** அவர்கள் ஆகும். மாதம் ஒருமுறை **உபவாசத்துக்காக** நாங்கள் சென்னையில் சகோ. **தினகர் வீட்டில்** ஒன்று கூடுவோம் அல்லது **சேலத்தில்** என்

வீட்டின் அருகே **துவாரகா ஓட்டல்** என்ற ஸ்டார் ஓட்டலில் ஒன்று கூடுவோம். அப்போது அந்த உபவாச ஜெபத்துக்குபின் ஒரு நாள் **சகோ.தினகரிடம்** சகோ. எட்வர்ட் பால் அவர்கள் **பிரதர் நீங்கள் ஜெபத்தில்** செத்தவர்களைப்பற்றி கூறுவதை நிறுத்துங்கள். அது **வேதவசன** அடிப்படைஅல்ல என்றார் நானும் **அதே கருத்தை** வலியுறுத்தினேன். ஆனால் அவர் அதை ஒத்துக்கொள்ளவில்லை அந்த காலங்களில் சகோ **தினகரன் கிண்டியில்** உள்ள ITI காம்கபவுண்டில் உள்ள SBI பேங்கில் Branch Manager ஆக பணியாற்றினார். அந்த இடத்தில் கீழே Bankம் மாடியில் அவர் வீடும் அமைந்திருந்தது.

ஒரு நாள் நாங்கள் உபவாசம் முடித்து சாப்பிட்டு கொண்டு இருக்கும் போது சகோ.**தினகரன்** அவர்கள் அதிகம் மதிக்க கூடியவர். ACA சபையின் தலைமை **பாஸ்டர் சுந்தரம்** அவர்கள் ஆகும். அன்று **பாஸ்டர் சுந்தரம்** அவர்கள் காரில் **தினகர்** வீட்டுக்கு வந்தார். அவர் காரை விட்டு இறங்கவில்லை பியூனிடம் சொல்லி அனுப்ப அவர் சாப்பாட்டை பாதியிலேயே விட்டு விட்டு கை கழுவி வேகமாக காரிடம் வந்தார். நாங்களும் கீழே இறங்கினோம். அப்போது பாஸ்டர் **சுந்தரம் அவர்கள்** சகோ தினகரனை பார்த்து தம்பி உன் கூட்டத்தில் **செத்து போனவர்களைப்பற்றி எல்லாம்** கூறுகிறாயாமே! **வேண்டாம் தம்பி,** அப்படி பேசாதே! நீ அப்படி செய்தால் பிறகு **மந்திரவாதிக்கும்** உனக்கும் வித்தியாசம் இல்லையே. கர்த்தர் **உனக்கு ஏதாவது** காண்பித்தால் அதை **உன்னோடு வைத்துக்கொள்** பிரசங்கத்தில் கூறாதே அப்படி கூற வேண்டுமானால் நீ தரிசனத்தில் கண்ட விஷயம் **வேத வசனத்தில் இருக்க வேண்டும்.** அப்படி காணப்பட்டால் அதை பிரசங்கத்தில் கூறு இல்லாவிட்டால் **அதை பற்றி பேசாதே** என்று கூறிவிட்டு போய் வருகிறேன் என்று கூறாமலேயே சற்று கோபத்தோடு சென்று விட்டார்.

பாஸ்டர் சுந்தரம் அவர்கள் சென்றபின் நாங்கள் வீட்டுக்குள் வந்தோம். சகோ. தினகரனிடம் நான் கூறினேன் பிரதர்! நாங்கள் இருவரும் பாஸ்டர் சுந்தரம் கூறியதைத்தான் உங்களிடம்கூறினோம். நீங்கள் **ஒத்துக்கொள்ளவில்லை.** இப்போது ஒரு **தேவனுடைய மனுஷனே** வீடுதேடி வந்து உங்களை எச்சரித்திருக்கிறார். இனி **மரித்தவர்களைப்பற்றி** பேசுவதும் பேசாததும் உங்கள் இஷ்டம் என்று கூறி விட்டோம். அன்று இரவு **என்னைத்தவிர** மற்ற **மூவரும்** கோயமுத்தூருக்கு திரும்ப சென்று விட்டனர்.

**நானும் என் மனைவியும்** மட்டுமே தினகரன் வீட்டில் தங்கிவிட்டோம். அது கடும் வெயில் காலம். வீட்டில் A/C இல்லை. ஆகவே அன்று இரவு நாங்கள் **முன் வெராந்தாவில்** வெறும் **பாய்** மட்டும் தரையில் விரித்து தூக்கம் வரும் வரை பேசிக்கொண்டிருந்தோம் அது எங்கள் வழக்கம். தரையில் முதலில் **என் மனைவி,** அவருக்கு பக்கத்தில் Mrs. **ஸ்டெல்லா தினகரன்,** அவர் பக்கத்தில் சகோ. தினகரன், சகோ. தினகரன் பக்கத்தில் **நான்** ஆகிய நான்கு

பேரும் வரிசையாக படுத்துக்கொண்டு பல விஷயங்களைப்பற்றி பேசிக்கொண்டிருந்தோம். நேரம் போனதே தெரியவில்லை. உள்ளே போய் படுக்காமல் அப்படியே உறங்கிவிட்டோம்.

- சகோ. தினகரனின் தாய்க்கு பல ஆண்டுகளாக Hysterical என்ற ஒருவித மன நோயினால் பாதிக்கப்பட்டு வந்தார். திடீர் திடீர் என்று கத்தி கூச்சல் போடுவார்கள். அப்படியே வீட்டைவிட்டு வெளியே ஓடிவிடுவார்கள். இது சகோதரனை பெரிதும் வேதனைக்கு உள்ளாக்கியது. அம்மாவையும், அப்பாவையும் சகோ. தினகரன் மிகவும் நேசிப்பார்கள், அம்மா வெளயே ஓடிவிடாமல் இருக்க வீட்டின் உள்பக்கம் பூட்டுபோட்டுவிடுவார்கள்,

அன்று இரவு நாங்கள் **நால்வரும்** வெராண்டாவிலேயே உறங்கிவிட்டோம். அந்த வேளையில் தினகரனின் தாயார் மெதுவாக வந்தார். கதவில் பூட்டுடன் சாவியை எடுக்காமல் விட்டிருந்தது. படுக்கபோகும்போது பூட்டிக்கொள்ளலாம் என்று விட்டுவிட்டபடியால் இந்த அம்மாள் **பூட்டை திறந்து** கதவையையும் திறந்து **மெத்தை படிகட்டை கடந்து** வீதியில் வந்து திடீரென்று வீல் என்று சத்தம் போட்டுக்கொண்டேயிருந்தார்கள். உடனே **தினகரன்** தான் உடுத்தியிருந்த **லுங்கி பனியனுடன்** படிகட்டில் இறங்கி ஓடினார். நான் ஒரு வீதியிலும் சகோதரன் ஒரு வீதியிலும் **அம்மாவை தேடினோம்.** அதற்குள் அந்த காம்பவுண்டில் இருந்த அனைத்து வீடுகளிலும் **லைட் எரிய தொடங்கியது.** குடியிருந்த **உயர் அதிகாரிகள்** எல்லாரும் மாடியில் இருந்தபடியே நாங்கள் ஓடுவதை அந்த காலனியில் வேடிக்கை பார்த்தார்கள். ஒருவழியாக அம்மாவை கண்டுபடித்துவிட்டோம். **நான்** ஒரு பக்கம் **சகோதரன்** ஒரு பக்கமுமாக அம்மாவை கெட்டியாக பிடித்துக்கொண்டு தரதரவென்று இழுத்துக்கொண்டு **மாடிப்படி ஏறி** உள்ளே அவர் அறையில் படுக்கவைத்தோம்.

அப்படியே அம்மா **கண்மூடினார்கள்.** சகோ. **தினகரன்** என்னை **தலையில் கை வைத்து** ஜெபிக்க சொன்னார்கள். அவரும் **தன் கையை** தலையில் வைத்து அழுது அன்று அவர் **ஜெபித்தவிதம்** என்னால் மறக்க முடியவில்லை. ஆண்டவரே **இதே வியாதியால்** பாதிக்கப்பட்ட **எத்தனை பேருக்கு** என் மூலமாய் நான் ஜெபிக்கும்போது **முற்றுமாய் அவர்களை விடுவித்தீரே.** என்னை பெற்று வளர்த்தி ஆளாக்கிய **என் தாயார்** இத்தனை வருடங்கள் **தொடர்ந்து** இந்த வியாதியால் **கஷ்டப்படவேண்டுமா? ஊரே வேடிக்கை பார்த்தார்களே,** அவர்களுக்கு நாளை நான் என்ன பதில் சொல்வேன் ? என்று கதறி அழுதார். கொஞ்ச நேரத்தில் **கை கால்** இழுப்பது **நின்று போனது,** அமைதியாக உறங்கினார்கள். இந்த நிகழ்ச்சிக்கு பிறகுதான் **கூட்டங்களில் செத்து போனவர்களை பற்றிய விவரங்கள்** கூறுவதை நிறுத்தினார்.

அதன்பின் நடந்த கூட்டங்கள் யாவும் மிக அருமையாக சுத்த சுவிசேஷமாக அறிவித்து பேசினார். ஆனால் அதன்பின் நடந்த எல்லா கூட்டங்களிலும் ஆட்கள் எண்ணிக்கை **குறைந்துகொண்டே** வந்தது.

☐ அதன்பின் **அமெரிக்க பயணம் மேற்கொண்டார்.** அங்கு ஜெபத்தில் பெயர் அழைக்கும் ஊழியரான **சகோ. பெனிஹின்** அவர்களையும் அவரின் குருவான **கேத்தரின் குல்மார்** என்பவரின் ஊழிய **வீடியோவை** கண்டார். அவர் **ஜெபத்தில் பெயர்** அழைப்பதும், கண்ணாடி பெட்டியிலுள்ள **பாம்பை கையில்** எடுப்பதுமான மந்திரவாதிகளின் காட்சிகளைபோல தன் கூட்டத்திலும் நடத்துவார். ஒருவர்மேல் கை வைத்தால் அல்லது மேலே உடுத்திய தனது **கோட்டை** கூட்டத்தை நோக்கி **வீசும்போது** அங்குள்ள **அத்தனை பேரும்** விழுவார்கள். வெருமனே வாய்கொண்டு கூட்டத்தை பார்த்து அவர் **ஊதினால்** மக்கள் அப்படியே **சாய்ந்து விடுவார்கள்.** இதை கண்ட சகோதரன் இது **மக்களை கவர** நல் யுக்தி என்று நினைத்து அந்த வீடியோவை வாங்கிகொண்டு இந்தியா வந்து அந்த வீடியோவை திரும்ப திரும்ப போட்டு பார்த்து **ஜெபத்தில் பெயர் அழைப்பதை** கற்றுக்கொண்டு அடுத்த கூட்டத்திலேயே அதை செயல்படுத்தி வெற்றி கண்டார்.

**யார் அந்த யசோதா?** யசோதா உன்னை கர்த்தர் காண்கிறார், உன் பிரச்சனை இன்றே தீரும். **யார் அந்த குளோரி,** குளோரி உன் வீட்டு சமாதான குறைவை நினைத்து கலங்குகிறாய் என்று கர்த்தர் உன்னைப்பற்றி கூறுகிறார். பயப்படாதே இன்று **உன் சத்தத்தை கர்த்தர் கேட்டார்.** சீக்கிரமே சமாதானம் உண்டாகும்,. இப்படி **தோராயமாக பல பெயர்களை ஜெபத்தில்** சரளமாக கூறினார், இப்போது தான் பழையபடி மறுபடியும் இவர் கூட்டத்துக்கு **ஆட்கள் திரண்டு வர** தொடங்கினார்கள். **ஆயர்கள்,** பாஸ்டர்கள், **பிஷப்மார்கள்** கூட்டமும் இவைகளை **காண** மேடையில் இவர் கூட்டத்தில் அமர்ந்தனர், **பெரும் விளம்பரம் கிடைத்தது.**

இதே மாய்மால வேலையைத்தான் நாலுமாவடி **மோகன் சி. லாசரஸ்** காப்பியடிதது அவரை பின்பற்றி வெற்றியடைந்தார். இவர் **தினகரனை அப்படியே காப்பியடித்தார்,** ஆறுதல் **வசனமாக** உள்ள வசனங்களை வேதத்தில **கண்டுபிடித்து** அதைப்பற்றி கூறி கர்த்தர் **உங்கள் கண்ணீரை துடைக்கிறார்,** உங்கள் **துக்கம் சந்தோஷமாக மாறும்** என்று கூறி மக்களை கவர்ந்தார். ஆனால் **வேத பாடம் நடத்த** இவர்களுக்கு தெரியாது. மக்கள் **ஆறுதலைதான்** தேடுகிறார்கள் என்பதை அறிந்து **மக்கள் பலவீனத்தை** இவர்கள் தங்கள் **ஊழிய வியாபார முதலாய் கையிலெடுத்து** மக்களை மூட்டாள்கள் ஆக்கினார்கள். இன்று பல ஊழியர்கள் ஜெபத்தில் **பெயர்** அழைக்கும் பொய்யான ஊழியத்தை நடத்திகொண்டிருக்கிறார்கள். **இந்த ஏமாற்று ஊழியத்தை** மையமாக வைத்து வட இந்தியாவில் **P.K.** என்ற சினிமா எடுத்து வெற்றிபெற்றார்கள். கேரளாவிலும் டிரான்ஸ் என்ற பெயரில் அதே சினிமா மாதிரி கதையை எடுத்து கிறிஸ்தவ ஊழியத்தை கேள்வி

குறியாக்கினார்கள். அந்த சினிமாவில் ஜெபத்தில் பெயர் அழைப்பது எப்படி என்பதை அப்படியே காட்டுகிறார்கள். கிறிஸ்தவ ஊழியர்கள் அதை கண்டும் திருந்தவில்லை.

## சகோ. தினகரனின் மிகப் பெரிய ஏமாற்று வியாபாரம்

பெரிய **வியாபாரிகளையும்** பெரிய **தொழிலதிபர்களையும்** பிடிக்க சகோ. தினகரன் ஒரு **யுக்தி** கண்டு பிடித்தார் – அதுதான் **ஆசீர்வாத தங்க சாவி**, சகோ.தினகரன் விற்கும் **தங்கசாவியை** ஆபீசில், தொழில்சாலையில் நீங்கள் உட்கார்ந்திருக்கும் மேஜை, நாற்காலிக்குமேல் **சுவரில் ஆணி** அடித்து தொங்கவைத்தால் பணம் **கொட்டோ கொட்டென்று கொட்டும்** என்று சகோ. தினகரன் விளம்பரப்படுத்தினார். அந்த **ஏமாற்று ஊழியத்தில்** மயங்கி **பண ஆசையில் முதலில் விழுந்தது** யார் தெரியுமா? நாலுமாவடி **மோகன் சி. லாசரஸ்** அவர்கள்தான். முதல் சாவியை **லட்ச ரூபாய் கொடுத்து** விலைக்கு **வாங்கினார்.** அந்த **தங்க சாவிதான்** இப்போது **மோகன் சி.லாசரசை** பெரிய **பணக்கார ஊழியரில்** 8வது இடத்தை பிடிக்க வைத்திருக்கிறது என்று ஜனங்கள் கூறத் தொடங்கினார்கள்.





## தினகரனின் ஆசீர்வாத உடன்படி பெட்டியின் ஏமாற்றுவேலை

**முன்னுக்கு வர** முடியாத **தொழிலதிபர்கள், கோடிக்கணக்கில்** கடனில் அகப்பட்டு **தவிப்பவர்கள்,** தங்கள் **கம்பெனி டாக்குமெண்ட், பத்திரங்கள்,** கடன் **வாங்கிய விவரம் அடங்கிய வங்கி கணக்கு பாஸ்புக்** யாவையும் **தினகர் ஜெபித்த அந்த மர பெட்டியில் வைத்தது** ஒரு வாரம் ஜெபித்தபின் எடுத்துக்கொள்ளலாம் அதன்பின் ஒரு **மாதத்தில் கடன் தீரும்** தொழில் **முன்னேரும்** என்றெல்லாம் **விளம்பரப்படுத்திவிட்டு** ஏமார்ந்து போனதில் **திருநெல்வேலி வியாபாரிகள்தான் முன்னிலை வகித்தார்கள்.** அதை அந்த பெட்டியில் ஒரு வாரத்தில் எடுக்க சில லட்சங்கள் கொடுக்க வேண்டும். ஆனால் **சொத்து பத்திரம், அடமான பத்திரம், கடன் பத்திரம்,** பேங்க பாஸ்புக் அந்த பெட்டியில் வைத்துவிட்டதால் அவரவர்களின் **ஆடிட்டர்களும், வக்கீல்களும்** அத்தனை வியாபாரிகளையும் எச்சரித்த பின் ஒரே வாரத்தில் சகோ. தினகரனிடம் சென்று பிரதர் நான் கொடுத்த **டாக்குமெண்டுகளை** கொடுத்துவிடுங்கள் என்று கெஞ்ஜி **திரும்ப பெருவதற்குள்** போதும் போதும் என்றாகிவிட்டது.

கொஞ்ஜம் கூட கூச்சம் இல்லாமல் தெய்வ பயம் இல்லாமல் **கர்த்தர் சொன்னார்** என்று கூறிய இரண்டுவிதமான **பொய் திட்டங்களை** சகோ. தினகரன் கூறுவது பொய்யான அறிவிப்பு என்று முதலில் **கேரள கிறிஸ்தவ** விசுவாசிகள்தான் விளங்கிக் கொண்டனர்.

**1) ஆசீர்வாத தங்க சாவி 2) ஆசீர்வாத உடன்படி பெட்டி**

இந்த விதமான **திருட்டு திட்டங்களை** தேவ மனிதன் என்று கூறப்பட்ட இவரால் எப்படி அறிவிக்க முடிந்தது. இந்த அறிவிப்பை நம்பி **தங்க சாவியை** லட்ச ரூபாய் கொடுத்து வாங்கிய **அந்த முட்டாள்கள்** எப்படிபட்டவர்களாக இருப்பார்கள் என்று வாசிப்பவர்கள் யோசித்துக்கொள்ளுங்கள்.

இப்படி சகோ. D.G.S. தினகரன் தன் ஊழியத்திலும் வாழ்க்கையிலும் கொஞ்சம் கொஞ்சமாக **கர்த்தரை விட்டு விலகி போய்விட்டார்** என்பதை **இயேசு அழைக்கிறார்** ஸ்தாபனத்தை முதன் முதலில் ஆரம்பித்த எங்கள் **நான்கு நபர்களுக்கு** மட்டுமே தெரியும்.

□ கடைசியாக **காருண்யா கல்லூரி** ஆரம்பிக்க போகிறேன் என்று எங்களிடம் கூறியபோது நாங்கள் **ஏகமனதாக கூறியது,** பிரதர் கர்த்தர் நம்மை **சுவிசேஷம்** அறிவிக்கத்தன் அழைத்திருக்கிறார், அதை தவிர எந்த **வியாபாரமும் ஸ்தாபனமும் கல்லூரியும்** ஆரம்பிக்க அல்ல என்று பளிச்சென்று கூறிவிட்டோம்,

ஆனால் அளவுக்கு அதிகமாக **காணிக்கைகள்** சகோ. **தினகரனுக்கு** வந்து சேர்ந்துவிட்டது, அதற்கான **செலவை காண்பிக்காமல்** போனால் **வருமான வரிதுறையில்** அகப்படுவோம் என்று ஆடிட்டர் அறிவித்திருக்கிறார். ஆகவே நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்று கூறினார்.

அதற்கு நாங்கள் அளவுக்கு அதிகமாக பணம் வந்ததால் **ஊழியத்தில் செலவு செய்யலாம், ஆதிவாசிகள்** மத்தியில் **ஆலயம்** கட்டிக்கொடுக்கலாம், **பள்ளி கூடமே** இல்லாத இடங்கள் ஏராளம் உண்டே, **பள்ளிக்கூடம் கட்டி** கொடுக்கலாமே என்று ஆலோசனை கூறினோம். அதற்கு அவர் **காருண்யா கல்லூரிக்காக நிலம் வாங்கிவிட்டேன்** , இனி **கட்டிடம் கட்ட** வேண்டும் என்றதும், நாங்கள் எழுந்து நின்றுகொண்டு **மன்னியுங்கள் பிரதர்** உங்கள் வழி வசனத்தைவிட்டு **வித்யாசமாக போகிறது,** இனி எங்கள் உதவி உங்களுக்கு தேவை இருக்காது என்று கூறி அன்று விலகியவர்கள்தான், அதன்பின் நாங்கள் **ஒன்று கூடவில்லை,** அவரவர் ஊழியத்தை நாங்கள் நால்வரும் உற்சாகத்தோடு செய்ய ஆரம்பித்து விட்டோம்

சென்னை பிஷப் Rt. Rev. **சுந்தர் கிளர்க்** அவர்கள் சகோ. தினகரனிடம் தான் உங்களுடன் துணை நிற்பதாகவும் **காருண்யா கல்லூரியை** துணிந்து தொடங்குங்கள், கல்லூரி **ஏழைக்களுக்காக** கட்டுகிறோம் என்று **அறிவியுங்கள்**. இன்னும் **அதிகமாக** காணிக்கை சேரும். உங்கள் மகனை MBA. படிக்க வைத்து **கல்லூரியை மகன்** பொருப்பில் விடுங்கள் என்று ஆலோசனை கூறியதால் அவர் மேலும் தவறு செய்ய காரணமானார்.

**இயேசு அழைக்கிறார்** ஸ்தாபனத்துக்கு சுமார் 7 **ஆடிட்டர்கள்** உண்டு அதில் ஒருவர் எங்களிடம் கூறியது. **நீங்கள் நால்வரும்** சகோ. தினகரனுக்கு கூறிய ஆலோசனை நல்லது, **பள்ளிக்கூடம்** கட்டலாம், ஆனால் **அதில் வருமானம்** வராதே, இன்ஜினியரங் **கல்லூரியாக** இருந்தா ஒரு **மாணவனிடம் லட்சக்கணக்கில் பணம் வாங்கலாமே!** இது சகோ. **தினகர் அவரின்** கணக்கு. ஆகவே உங்கள் ஆலோசனை எதுவும் எடுபடாது என்றார். அன்றோடு நாங்கள் நால்வரும் சகோதரனை விட்டு விலகினோம். அவருக்கு உதவி செய்ய பிஷப்மார்களே நிறைய பேர் உண்டு என்று அந்த ஆடிட்டர் கூறினார்.

இவர் வழியை பின்பற்றி நாலுமாவடி **மோகன் சி. லாசரஸ்** நாலுமாவடி கிராமத்தில் **சூப்பர் ஸ்பெஷாலிட்டி** ஆஸ்பத்திரியை **பல கோடி ரூபாயில்** கட்டி முடித்தார். அது பெரும் தோல்வியில் முடிந்தது இதுவும் மோகன் சி. லாசரஸ்க்கு சகோ. தினகரனைவிட **கோடி கோடியாக காணிக்கைகள்** குவிந்துகொண்டே இருக்கிறது. அத்தனை பணத்தையும் வைத்து என்ன செய்வது. **குக்கிராமத்தில்** இப்படிப்பட்ட **பெரிய திட்டத்தில்** ஆஸ்பத்திரி கட்டினால் நஷ்டம் வரும் என்று தெரியும். ஆனால் அதை **வரிமான வரித்துறைக்கு நஷ்ட கணக்கு** காட்ட உதவியாக இருந்தது. இதைத்தொடர்ந்து இவர் உபதேசத்திலும் கள்ள உபதேசங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வரத் தொடங்கியது. இவரை வழி தவற செய்தவர் சகோ. தினகரன் தான் என்றால் அது தவறாகாது.

மிஷனரி ஊழியம் செய்கிறேன். ஒரு மிஷனரிக்கு 5000 கொடுத்து உதவுங்கள் என்று விளம்பரப்படுத்தி, உடன் பணம் அனுப்பிகொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு மிஷனரிக்கு 3000 ரூபாய்தான் கொடுக்கிறார் என்பதை நான் நேரில் கெட்டு அறிந்த தகவல் ஆகும். ஜனங்கள் அவரை இன்னும் நம்புகிறார்கள்.

இதற்கு மேல் சகோ. தினகரனின் **தவறான திட்டங்களை** கர்த்தரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை, **மகளின் கார் விபத்தும் மரணமும்** – சகோ. தினகரனை மாற்ற முடியவில்லை, அவர் திருந்தவும் இல்லை அதன்பின் சகோ. தினகரன் **உடல் உறுப்புகள்** ஒவ்வொன்றாய் இழந்தார்.

ஒவ்வொரு முறையும் **அமெரிக்கா** சென்று **இரகசியமாக ஆப்பரேசன்** செய்து வந்தார். முதலாவது **இருதய அறுவை** சிகிச்சை செய்யப்பட்டது. அந்த ஆபரேசன் செய்த **வால்வு** சகோதரனின் **இருதயத்தில் பொருந்தவில்லை.** இரண்டாவது முறை இருதய **ஆப்பரேசன் செய்தும** சரியாகவில்லை. **பேஸ் மேக்கர்** என்ற கருவியை பொறுத்தினார்கள். அந்த கருவியும் சரியாக இயங்க மறுத்தது. அதன் பிறகு **கிட்னி இரண்டும் கெட்டுப்போனது.** சில காலம் **டையாலிசிஸ்** செய்து **மரணம் தள்ளி** வைக்கப்பட்டது. மறுபடியும் டாக்டர்களின் ஆலோசனையின்படி **வேறொரு மனிதனின் கிட்னியை கோடிக்காண ரூபாய்கள்**

கொடுத்து அமெரிக்காவில் ஆஸ்பத்திரியில் அந்த **புதிய கிட்னி பொறுத்தப்பட்டது.** ஆனால் அதுவும் சகோதரனில் உடலில் சரியாக இயங்கவில்லை. அதோடு பொருந்தவும் இல்லை.

கர்த்தரின் இத்தனை தண்டனைகளை அனுபவித்தும் **தான் கர்த்தரின் ஊழியத்தில்** தானே உண்டாக்கிய **தவறை திருத்திக்கொள்ளவும்** மன்னிப்பு கேட்கவும் முயலவில்லை. அவர் மன்னிப்பு கேட்கவில்லை என்று எப்படி உங்களுக்கு தெரியும்? என்று வாசகர்கள் கேட்கலாம். ஒருவன் தவறை **திருத்திக் கொண்டால்** அது வெளிப்படையாகவே தெரியும். **காருண்யா டீம்டு யூனிவர்சிட்டுயாக** மந்திரி சிபாரிசுக்கு வேண்டி இந்து மதத் தலைவர் **சங்கராசாரியாருக்கு வெள்ளியால் செய்த பூஜை பெட்டி வெகுமதியாக கொடுத்தது** தவறு என்று **மக்கள் முன், அல்லது தன் பத்திரிகை மூலம்** அறிக்கை யிட்டிருக்கலாமே!. **காருண்யாவை CSI டையோசிஸ்க்கு ஒப்படைத்து** அல்லது வேறு ஏற்பாட்டை செய்து **கல்லூரி பெறுப்பிலிருந்து** விலகியிருக்கலாம். அதன் மூலம் நிச்சயம் **கர்த்தரின் மன்னிப்பை பெற்றிருக்கலாம்.** இன்று அவரின் **ஆத்துமா எங்கு போயிருக்கும்?**



சரி மகன் **பால் தினகரனாவது** கல்லூரி பொறுப்பிலிருந்து விலக ஏதாவது ஏற்பாட்டை செய்திருக்கலாம். ஆனால் தகப்பனின் வழியில் தான் சென்றதோடு ஒரு படி மேலாக போய் பண வியாபாரம் பெருக புதிய ஏற்பாடுகளை செய்தார். **தகப்பன்** எவ்வழியோ **மகனும்** அவ்வழி. தகப்பனார் D.G.S. தினகரன் இறந்தார். மகனின் தவறான வழிகள் பெருக ஆரம்பித்தது. அவைகளை இப்போது விளக்க இடமில்லை. காணிக்கை பணம் ் பருக கல்லூரியில் இருந்து பண வரவு அதிகமாக, அதை **வருமான வரித்துறைக்கு** காட்ட முடியாமல் சுமார் 127 கோடி ரூபாயை **காருண்யா ஓய்வு அறையில்** பதுக்கி வைக்க **மீதியை தங்க கட்டிகளாக்கி அதை வீட்டில் பதுக்கி வைக்க** வருமான வரி துறையால் கையும் களவுமாக பிடிபட்டார்கள். அப்போதே ஊழியம் சரிந்தது. **இலங்கை ஊழியம்** செய்யாதபடி **விமான நிலையத்திலேயே** போலீஸ் இவர்களை திருப்பி இந்தியாவுக்கு திருப்பி அனுப்பிவிட்டனர். மேலும் மேலும் ஊழியம் சரிந்தது. அதன்பின் மனைவி **இவான்ஜலின்** தன் பெயருக்கு **பெரும் பொய்யை** கூறி மேலும் **ஊழியத்தை அழித்தார்.**

## **சைபர் பேலன்ஸ் மருமகள்** திருமதி **இவாஞ்ஜலின்**

நீங்கள் கேட்ட கேள்விக்கு பதில் கூற இவரது **மாமனாரின்** ஆரம்ப கால சரித்திரம் அறிவிப்பது மிக அவசியம். எத்தனையோ தலைமுறை மக்கள் **மேலே எழுதிய விவரம்**

அறியாமல் இன்றும் சகோ. **D.G.S. தினகரனை** தெய்மாக்கி **காலை எழுந்தால்** சகோ. **தினகரன் பாட்டை** போட்டு **அதன்பின் ஜெபிப்பது.** கார் எடுக்கும் முன் **சகோ. தினகரன் என்றோ** ஜெபித்த ஜெபமும் ஒரு **பாடலும்** அடங்கிய **பெண் டிரைவை** காரில் பாட வைத்து **அதன்பின் காரை** ஸ்டார்ட் செய்வது வழக்கமாக்கி கொண்டார்கள். அப்படிப்பட்ட விசிறிகள் ஏராளமானவர்கள் இப்போதும் உண்டு. இந்த **மூட பழக்கம்** இனியாவது **மாறாதா?** என்ற எதிர்பார்பில் இதை எழுதுகிறேன்.

**கேள்வி (1) :** இந்த பிரச்சனைகள் பூதாகாரமாக எழும்ப காரணம், ஜீவ **நீரோடை ஆசிரியரும்** ஊழியருமான **பாண்டிச்சேரி** சகோ. **சாம்சன் பால்** அவர்கள் தன் **Youtube**ல் சகோதரி **இவாஞ்ஜலின்** பேசிய செய்தியை அந்த **வீடியோ காட்சியுடன்** லைவாக விவரித்து பேசியது தான் **யாராலும் மறுக்க முடியாத** செய்தியாகி அது தீபோல பறவி **மற்ற வீடியோ** Youtube **நடத்துபவர்கள்** மற்றும் தனிப்பட்ட **கிறிஸ்தவ விசுவாசிகள்** மூலமாக இந்தியாவிலும், உலக முழுவதிலும் **இயேசு அழைக்கிறார்** ஸ்தாபகரின் **மகன், மருமகள்** யாவரையும் அவர்களின் **பொய்யான** ஊழியங்களையும் வெளிப்படுத்தியது.

இந்த Youtube செய்திகள் வெளிவந்ததற்கு முன்பே நான் என் **ஜாமக்காரனில்** இவர்களின் அத்தனை பொய்யான ஊழியத்தை குறித்து எழுதினேன். ஆனால் **ஆதாரத்தை** எழுத்தில் காண்பிக்க முடியவில்லை. ஆகவே சகோ. **சாம்சன்பால்** அவர்கள் **வீடியோ** ஆதாரத்துடன் Liveஆக தன் **Youtubeல் வெளியிட்டது** மிகவும் பிரயோஜனமாக அமைந்தது.

**சந்தேகம் (2) கேள்வி** : ஒன்று என்னவெனில் பால் தினகரன் மனைவியான இவாஞ்ஜலின் வீடியோ பதிவில் ஒரு பிரசங்கத்தில் கூறியதாவது உலக மக்கள் **இயேசு அழைக்கிறார்** ஊழியம் **பணக்கார ஊழியம்**. ஆகவே **காணிக்கையை அவர்களுக்கு அனுப்ப வேண்டாம்** என தவறான செய்தியை பறவ விட்டார்கள். கர்த்தருக்கு முன்பாக நான் உண்மையை சொல்கிறேன், நீங்களே என் வீட்டுக்கு வந்து **எங்கள் பேங்க் பாஸ் புக்** பாருங்கள். எங்கள் பேங்க் கணக்கில் **சைபர் பேலன்ஸ்** தான் காணப்படும். உங்களில் யாருக்காவது நான் கூறுவதில் சந்தேகம் இருந்தால் என் வீட்டுக்கு வாருங்கள் என்பேங்க பாஸ் புக்கை காட்டுகிறேன். அப்போதாவது நம்புவீர்களா? என்று பேசியதை என்னிடம் சிலர் தங்கள் மொபைலில் உள்ள Youtubeல் வந்ததை காட்டினார்கள். அந்த சைபர் பேலன்ஸ் **அம்மையாரிடம்** தயவு செய்து கேளுங்கள் எந்த பேங்கிலும் குறைந்தபட்சம் 2000/- ரூபாயாவது **குறைந்தபட்ச சேமிப்பாக** வைத்திருக்க வேண்டும் என்பது வங்கியின் சட்டமாகும். இவர் கூறுவதை ஒரு பட்டிக்காட்டான்கூட நம்பமாட்டான். **கண்மூடித்தனமாக** காணிக்கை அனுப்பும் **இயேசு அழைக்கிறார்** விசிறிகள் ஒருவேளை இவாஞ்ஜலின் கூறியதை நம்பலாம். நிச்சயமாக அவர்கள் முட்டாள்களாக இருக்கலாம்.

**சந்தேகம் (2)** இந்த **சைபர் பேலன்ஸ்** அம்மையாருக்கு எனக்கு தெரிந்து மொத்தம் **நான்கு** பேங்கில் **பணவரவு** வைத்துள்ளார்கள். இவற்றில் எந்த **பேங்கில்** இவருக்கு **சைபர் பேலன்ஸ்** இருக்கிறது என்பதை **இயேசு அழைக்கிறார்** குடும்பத்தினரை சந்தித்து கூறச்சொல்லுங்கள். **பொய் பேசும்** மருமகளை வீட்டார் அறிந்துகொள்ளட்டும்.

**கேள்வி 2 : கனடாவில் நடந்த ஆகாச புளுகு கதை**



**இவான்ஜலின்** கூறுகிறார் **கனடாவில்** நானும் கணவனும் வந்து சேர்ந்தபின் **எங்கு தங்குவது** என்று தெரியாமல் தவித்தோம். **தங்க வீடு** எதுவும் கிடைக்கவில்லை. வேறுயில்லாது, ஒரு **ஓட்டலில்** தங்கினோம். அங்கு சுமார் 10 நாட்கள் தங்கினோம். கர்த்தாவே எங்களுக்கு நல்ல **வீடு தேவை.** வீடுதேடி கண்டுபிடிக்க **ஒரு காரும் தேவை** என்று ஜெபித்துவிட்டு படுத்தேன். அன்று நடு இரவு திடீரென்று ஒரு **தேவ தூதன்** என்னை தட்டி எழுப்பினான். **சீக்கிரம்** எழும்பு, வீடு தேட ஒரு **கார் வேண்டும்** என்று ஜெபித்தாயே ! அது **என்ன மாடல், என்ன விலையுள்ள** கார் தேவை, **எந்த கம்பெனி கார் தேவை,** இந்த விவரங்களை **சீக்கிரம் சொல்.** நான் மிகவும் அவசரமாக திரும்பி போக வேண்டும் என்று கூறினார். அந்த **தூதனுக்கு** என்ன மாதிரி அவசரமோ! பாவம் தாமதிக்காதே சீக்கிரம் சொல் என்றார். அப்போது மெத்தையிலிருந்து கீழ் இறங்கி விதவிதமான **கார் கம்பனி காட்லாக்** அட்டையை கொண்டுவந்து குறிப்பிட்ட **காரையும்,** கலரையும் காண்பித்தேன். நீ விரும்பி கார் நிச்சயமாக கிடைக்கும் என்றும் கூறி அந்த தூதன் வயிற்றோட்டம் உள்ளவர்போல் கூறிவிட்டு வேகமாக மறைந்து போய்விட்டார்.

என் கணவருக்கு **தூதன் திருட்டுத்தனமாய்** இரவு தன்னிடம் வந்து போனது தெரியாது. மறுநாள் காலை என் கணவர் என்னை அழைத்து இன்று நாம் வெளியே போகிறோம். **உனக்கு பிடித்த கார்** உனக்கு **வாங்கிதர போகிறேன்** என்றார். எனக்கு ஒரே ஆச்சரியம் தூதன் வந்தது கணவருக்கு தெரியாது. ஆனால் **அதே கார்** வாங்கிதருவதாக கூறியதும் கர்த்தர் தம் பிள்ளைகளை நடத்தும் அற்புத விதத்தை என்வென்று சொல்ல, என்றார்.

**சந்தேகம் 1** இந்த நாடகத்தில் **ஒரு சந்தேகம்,** இவர்கள் இந்தியாவிலிருந்து புறப்படும் போதே **கனடா நாட்டுக்கு** இவர்களை **அழைத்தது யார்? அவர் விலாசம்** ஆகியவைகளை **Imigration** அட்டையில் குறிப்பிட வேண்டும். அதில் என்ன **காரணத்துக்காக** கனடா தேசத்துக்கு வருகிறீர்கள், இந்த விவரங்களை எழுத வேண்டும். **இவர்களை அழைத்தவர் வீடு** இருக்கும்போது இவர்கள் ஏன் **வீடு கிடைக்காமல்** நடுத்தெருவில் நிற்க வேண்டும் ? விமான நிலையத்தி லிருந்து **காரில்தான்** புறப்பட்டிருக்க வேண்டும். டிரைவரிடம் **எங்கு போக வேண்டும்** என்று கூற வேண்டுமே? அப்படியிருக்க

இந்த டாக்சி டிரைவர் **நடுரோட்டில் இவர்களை** விட்டுவிட்டு போய்விடுவாரா? என்ன கதை இது?

சரி அப்படியே நடுத்தெருவில் செய்வதறியாமல் தவித்த இவர்களுக்கு **லாட்ஜில் தங்க** இந்த **சைபர் பேலன்ஸ்** உள்ள இந்த குடும்பத்துக்கு **பணம் ஏது?** இவர்கள் **சாதாரண லாட்ஜில்** தங்க மாட்டார்கள் **ஸ்டார் ஓட்டலில்தான்** தங்கியிருக்கிறார்கள்.

இந்தியாவில் ஒரு ஸ்டார் ஓட்டலில் தங்கினாலே குறைந்தது 15000/- ரூபாய் **ஒரு நாள் வாடகை** கொடுக்க வேண்டும். அப்படியிருக்க **கனடா** நாட்டில் லாட்ஜில் தங்குவதானால் ஒரு நாளைக்கு **லட்சக்கணக்கில் வாடகை** கொடுக்க வேண்டுமே! **பல லட்ச ரூபாய்க்கு** பணம் எங்கே? அடுத்தது இப்போது புதிய கார் சொந்தமாக ஓட்ட **உயர்ந்த கம்பெனி** கார் வாங்கிவிட்டார்கள். **நடுவீதியில் தவித்தவர்களுக்கு** புது மாடல் **கார் எப்படி கிடைத்தது?** அதற்கும் **பணம் எப்படி** கிடைத்தது ?

**அடுத்த டிராமா ! வீடு ஒன்று** வேண்டும் என்று ஜெபித்தவர்களுக்கு **லோனில் ஒரு அழகான பங்களா** வாங்கிவிட்டார்கள். **லோன் வாங்க** யார் சிபாரிசு கடிதம் தந்தாங்க., கனடா பிரைமினிஸ்டர் தந்திருப்பாரா?

**சந்தேகம் 2 இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம்** கனடாவில் **டொரோணடோவில்** உண்டு. ஒரு புதிய நாட்டில் **ஒரு வீடு** வாங்குவதானால் அதாவது **ஜெப கோபுரத்துக்கு** வீடுவாங்க வேண்டுமானால் வாங்குபவர்களுக்கு **கனடாவில்** ஏற்கனவே **சொந்த வீடு** இருப்பதை காட்ட வேண்டும். அந்த விதத்தில் ஏற்கனவே சொந்த வீடு **டொரோன்டாவில்** இவர்கள் வாங்கி **பல மாதங்களுக்கு முன்பே** அதில் குடியேறி விட்டார்கள் என்பதை நாம் அறிவோம்.

- ☐ **மூத்த மகள்** WCCயில் படிக்கும்போது, **காதல் பிரச்சனையில்** அகப்பட்டதால் மகளை சென்னையிலிருந்து வலுக்கட்டாயமாக அவரை பிரித்து குடும்பத்தோடு **கனடா நாட்டுக்கு** குடிபெயர்ந்து விட்டனர். சகோ. DGS தினகரனின் மனைவி சகோதரி **ஸ்டெல்லா தினகரன்** மட்டும் கனடா நாட்டுக்கு வர மருத்து **என் ஊழியம் இந்தியாவில்தான்** என்று பிடிவாதமாக இருந்துவிட்டார். இப்போது **பால் தினகரன், மனைவி இவாஞ்ஜலின், பிள்ளைகள்** யாவரும் **கனடா நாட்டில் குடியேறிவிட்டனர்.** இவர்கள் குடியேறி இருக்கும் வீட்டுக்கு அருகேயும் மறுபக்கமும் 13 **ஜாமக்காரன்** வாசகர்களும் ஒரு **பாஸ்டரும்** குடியிருக்கிறார்கள். விவரம் அவர்கள் மூலமாக எனக்கு செய்தியாக வந்தது.

சரி இப்போது விஷயத்துக்கு வருவோம். இவர்களின் இந்த **பழைய பங்களா** கனடாவில் இருக்க இவர்கள் ஏன் **தங்க வழியறியாது** நடுரோடில் நிற்க வேண்டும். ஏன் **அத்தனை லட்சம்** கொடுத்து **லாட்ஜில்** தங்க வேண்டும். அந்த கனடாவில் **ஜெப கோபுர** பொருப்பாளிகள் யாரும் இவர்களுக்கு தெரியாதா.? **ஜெப கோபுர உபயோகத்துக்கு** ஏற்கனவே வாங்கப்பட்ட **கார் உண்டே!** எதற்கு **புதுகார்** வாங்க வேண்டும்.

☐ **மூத்த மகள்** திரும்ப இந்திய ஓடி வந்துவிட்டார். **அது தனி கதை.** இப்படி பொய்க்குமேல் பொய்களை **சைபர் பேலன்ஸ்** இவாஞ்ஜலின் ஏன் பேசவேண்டும். இந்த விஷயத்தில் **பால் தினகரன்** ஏன் வாயை திறக்கவில்லை.

**சந்தேகம் 3 இயேசு அழைக்கிறார்** ஸ்தாபனத்துக்கு 14 வெளிநாடுகளில் **ஜெப கோபுரமும் கட்டிடங்களும்** கார்களும் உண்டே. . **எருசலேமில்** உள்ள **இயேசு அழைக்கிறார்** பெயரில் 27 அடுக்கு **மிக உயர்ந்த கட்டிடங்கள் உண்டு.** ஒரு பாதி உலகின் மிகப்பெரிய **கம்பெனிகளுக்கு** வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். மாத வாடகை மட்டும் **மில்லியன்** அல்ல, பில்லியன் டாலர் கணக்கில் மாதா மாதம் **இயேசு அழைக்கிறார்** பெயரில் பால் தினகரனுக்கு கிடைக்கிறது.

அதுமட்டுமல்ல எருசலேம் காண வரும் **டூரிஸ்டுகள்** தங்க ஏராளமான **தங்கும் அறைகள்** வாடகைக்கு விட்டுள்ளார்கள்.

அதோடு **இதே கட்டிடத்தில்** மிக சிறந்த பெரிய Restaurant **சாப்பிடும் உணவகம்** 24 மணி நேரமும் இயங்கம் உலக தரத்தில் உலகின் **அனைத்து நாடுகளின்** சுவைக்கு ஏற்ப சமைக்க கேட்டரிங் படித்த **பட்டதாரிகள்** அங்கு உண்டு, **கேரளா** உணவு, **மத்திய கேரளா** உணவு, **மலபார்** மக்களின் உணவு, **தெற்கு கேரளா** உணவு, **தமிழர்களின்** உணவு, **வட இந்தியர்களின்** உணவு, **பஞ்ஜாபிகள்** உணவு, **அமெரிக்க, ஐரோப்பியன்** போன்ற பல நாடுகளின் உணவு இவை யாவும் 24 மணி நேரமும் கிடைக்கும். அதில் கிடைக்கும் கோடிக் கணக்கான வருமானம் இவர்கள் கணக்கில்தானே வருகிறது. வருமானம் கோடிகோடியாக கிடைக்க பல நாட்டு **ATM போன்ற** பலவித **பண கார்டுகள்** பால் தினகரன் கையில் உண்டு. கனடா நாட்டு **ATM** கார்டுகளும் கையில் உண்டு அப்படியிருக்க கனடாவில் இவர்களுக்கு பணக் கஷ்டம் எப்படி உண்டாகும்.

அமெரிக்காவுக்கும் – தென் அமெரிக்காவுக்கும் இடையே ஒரு தீவும் அரன்மனையும் இவர்களுக்கு சொந்தமாக உண்டு. இவைகளை நீங்களுக்கு Google லில் சென்று நீங்கள் பார்க்கும்போது Soldout என்ற வார்த்தையை பார்க்கலாம்.

**காருண்யாவின்** கருப்பு பணம் யாவும் **பல வெளி நாட்டு பேங்கில் உண்டு.**

இத்தனை பெரிய **கோடீஸ்வரன்** மனைவி **ஏஞ்ஜலின்** அவர்களுக்கு **கனடாவில்** தங்க **வீடு இல்லாமல்** லாட்ஜில தங்கினார்கள் என்றால் இவர்கள் அண்டபுளுகு, ஆகாச புளுகு அம்புலிமாமா கதைகளை அள்ளி வீசியுள்ளதை மக்கள் குறிப்பாக **ஜாமக்காரன் வாசகர்** அறியாமல் இருப்பது எப்படி? கனடாவில் இவரின் வாசகர்கள் ஆயிரக்கணக்கில் உண்டு. **கனடாவில்** கூட்டம் நடந்தபோது **இவர் தங்கின மலையாளிகளின் பங்களாக்களும்** உண்டு. அப்படியிருக்க கனடாவில் தங்க இடமில்லாமல் எப்படி தவித்திருப்பார்கள்?

**இவாஞ்ஜலின் Youtube செய்தியால்** இவர்களை பேட்டி எடுக்க வருபவர்களுக்கு குடும்பத்தில் உள்ள யாரும் **பேட்டி கொடுக்க கூடாது** என்று தம்பி **பால் தினகரன்** கண்டிப்பான கட்டளையிட்டிருக்கிறார். என்றாலும் **புது கலியாணம்** செய்த கடைசி மகள் **ஸ்டெல்லா** மட்டும் **மார்ச்** மாதம் 3வது வாரம் **பேட்டி** கொடுத்தார். பக்கத்தில் கணவர் உட்கார்ந்திருக்க ஸ்டெல்லா மட்டும் திருமணத்தில் அணிந்த விலை உயர்ந்த உடையைபோல் ஒரு உடையை உடுத்தி வழக்கம்போல் எல்லா பற்களும் தெரிய சிரித்துக்கொண்டு பதில் கூறினார்.

**கேள்வி** : இத்தனை அவமானமான செய்திகள் பரவியதைகுறித்து உலகெங்குமுள்ளவர் கேள்வி கேட்கிறார்கள். **உங்கள் தாய்** இவான்ஜலின் பேசிய செய்தியால் வந்த அவமானத்தை குறித்து நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்று கேட்ட கேள்விக்கு, அவள் சிறியவாளாயிருந்தாலும் **மிக ஞானமாக** பதில் கூறினாள். **இயேசு அழைக்கிறார்** குடும்பத்தின் மீதும் **ஊழியத்தின் மீதும்** என் தாத்தா **DGSதினகரன்** காலத்திலிருந்தே **மோசமாக பேசப்பட்டது.** அவர் அதை **சந்தித்ததை போல** அவர் **எதற்கும் பதில் கூறாததை போல** நாங்களும் அவர் பாணியை பின்பற்றுகிறோம். **பல அவமான செய்திகள்** எங்கள்மேல் சுமத்தப்படுகிறது. நாங்கள் அதை **தைரியமாக சந்திக்கிறோம்**. கர்த்தர் சொன்னார் **யுத்தம் என்னுடையது. நீங்கள சும்மா இருங்கள்** என்றார், ஆகவே **கர்த்தர்** எங்களுக்கு பதிலாக **நடவடிக்கை எடுப்பார். யுத்தம் செய்வார்.** நாங்கள் சந்தோஷமாகத்தான இருக்கிறோம் என்றார்.



மற்றொரு ருசிகர தகவல்கள் உண்டு. ஒன்றன்பின் ஒன்றாக வெளிவந்து கொண்டிருக்கிறது. அவைகளை ஆதாரத்துடன் Youtubeகாரர்கள் வெளியிட காத்திருக்கிறார்கள்.

தமிழில் ஒரு பழமொழி உண்டு. **நுநலும் தன் வாயால் கெடும்**. அப்படி பால் தினகரனின் மனைவி **இவான்ஜலின்** அவர்களின் வெட்கக்கேடான **செய்திகளை வீடியோக்களில் கூறி இயேசு அழைக்கிறார்** ஊழியத்தை அழித்து கெடுத்துவிட்டார் என்றாலும் **இவர்களுக்கு பணத்துக்கு கவலையில்லை. பத்து தலைமுறைகள்** வேலை ஏதும் செய்யாமல் வீட்டில் இருந்தாலும் மிக ஆடம்பரமாக வாழ முடியும். இப்போது இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் இன்னும் இவர்களையும், **ஜெப கோபுரங்களையும்** நம்புகிறவர்கள் இருக்கும்வரை இவர்கள் **ஊழிய வியாபாரம் ஓடும்.** ஜெபியுங்கள். வேறு என்ன செய்ய. இவர்கள் சொத்தை அனுபவிக்கலாம். ஆனால் இவர்களின் ஆத்துமா? ஜெபிப்போம்.

# கன்னியாகுமரி டையோசிஸ் பிஷப்
# Rt. Rev. Dr. A.R. செல்லையா அவர்கள்
தன் டையோசிஸ் மக்களுக்காக எழுதியது

## திருச்சபை பேராயம் மற்றும் பாராளுமன்ற தேர்தல்



திருமறையில் **தேர்தல்** என்பது ஒரு **தெய்வீகமான செயல்.** தெரிவு செய்யப்பட்ட பேராய மக்கள் சலுகைபெற மட்டும் அல்ல. சொல், செயல், சிந்தனை, நடை, உடை, பாவனை மற்றும் நடத்தை அனைத்திலும் பொறுப்போடு வாழ கடமைப்பட்டவர்கள்.

இவர்கள் எங்ஙனம் இருக்கவேண்டும் என்பதையும், **முதன்மை பணி** செய்வோரின் பண்புகள், தகுதிகள் எங்ஙனம் இருக்க வேண்டும் என்பதும் திருமறையில் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது திருச்சபை பேராயம் மற்றும் நாட்டில் நடைபெறும் அனைத்துத் தேர்தலுக்கும் பொருந்தும். நாம் **வாக்காளர்களாக,** அல்லது **வேட்பாளர்களாக** இருக்கலாம். நம்மை நினைத்துப் பார்த்து ஜெபத்தோடு, **என்** அணி, **என்** குடும்பம், **என்** ஜாதி, **என்** ஊர்காரர், என் இடத்துக்காரர், **என்** பந்தம் என்ற **எண்ணங்களை குறைத்து** வேட்பாளர்களும், வாக்காளர்களும் திருமறை வெளிச்சத்தில் திருமண்டல சபையில் பொறுப்பேற்க தகுதியுடையவர்களா? எனச் சிந்திப்பது முக்கியம்.

இந்த **தகுதியில்** ஒன்று கூட குறைந்தால் **ஆண்டவரே!** இன்னும் என்னை **தகுதிபடுத்தும் எனத் தாழ்மையோடும்,** பொறுப்போடும் இறைவே ண்டல் செய்வோம். **வழக்கு, குளருபடி** மற்றும் தேர்தலில் ஜெயிக்க **குறுக்கு வழிகளை** நாடாமல் இருப்போம். 1 பேதுரு 5:6இல் எழுதியுள்ளபடி ....ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் **அடங்கியிருங்கள்.** மேலும் கீழ்க் குறிப்பிடும் பகுதிகளை இந்த தேர்தல் காலத்தில் ஜெபத்தோடு வேண்டுகிறேன். இதில் **கடவுளின் பணிக்கென்று** தெரிவு செய்யப்படு பவர்களின் **பண்பும், தகுதியும், பணிவும்** அடங்கியுள்ளன.

**தீத்து** 1ம் அதிகாரம் வசனம் 7ல் **குற்றம் சாட்டப்படாதவர்,** தன் **இஷ்டப்படி செய்யாதவர், முற்கோபம் கொள்ளாதவர், மதுபானப் பிரியமில்லாதவர், அடியாதவர், இழிவான ஆதாயத்தை இச்சியாதவர்.**

**வசனம் 8ல் அந்நியரை உபசரிக்கிறவர்,** நல்லோர் மேல் பிரியமுள்ளவர், தெளிந்த புத்தியுள்ளவர், **நீதிமான், பரிசுத்தமுள்ளவர்.**

**வசனம் 9ல் ஆரோக்கியமான உபதேசம் செய்பவர்.** புத்தி சொல்லுகிறவர், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணுகிறவர். **வசனத்தின்படி நன்றாய் வாழ்பவர்.** திருமண்டல பணிக்கும், திருச்சபைக்கும் தெரிந்தெடுக்கப்படவேண்டும்.

ஜாமக்காரன்

25 வருடங்களுக்கு முன் **தூத்துக்குடி** CSI திருமண்டல எலக்ஷன் சமயத்தில் பிஷப் ஐயா எழுதியது போல நானும் தகுதிகளைக் குறத்து எழுதி அச்சிட்டு **துண்டு பிரதிகளை** ஜாமக்காரன் பத்திரிகைக்குள் எலக்ஷன் நடைபெறும் **தூத்துக்குடி** டையோசிஸ் வாசகர்களின் விலாசத்துக்கு அனுப்பி அதை தூத்துக்குடி டையோசிஸ் பெண்கள் வாசித்து அந்த துண்டு பிரதியை காப்பி எடுத்து டையோசிஸ் பெண்கள் ஐக்கிய சங்கம் மூலமாக அனைத்து பெண்களுக்கு வினியோகம் செய்யும்படி ஏற்பாடு செய்தேன். அந்த துண்டு பிரதியில் வாசிக்கும் பெண்கள் தன் கணவன்மார் களைப்பற்றி நன்கு அறிவார்கள். யாராவது **குடிகாரர்களோ,** இருமனைவி உடையவர்களோ. **சண்டையிடுபவர்களாகவோ** இருந்தால். அவர்களை **தேர்தலில்** கமிட்டியில் **நிற்காதபடி தடைசெய்ய சொல்லி** ஆலோசனை எழுதினேன். நல்ல பலன் கிடைத்தது. சண்டையிடும் பழைய கமிட்டி முழுவதும் தோற்றது. தெய்வ பயம் உள்ளவர்கள் கமிட்டியில் ஜெயித்து பொருப்பெடுத்தனர்.

## திருநெல்வேலி CSI டையோசிஸ் வாசகர்களுக்கு மட்டும்

## ஓசன்னா தேவாலயத்தில் ராஜா

### ஆரம்ப கால யூத தலைவர்களின் கொள்ளை



அநீதியின் செயல்கள் : புதிய ஏற்பாட்டு காலத்தில் கிறிஸ்தவ சபை தோன்றுவதற்கு முன்

**ஆலய தலைமை** குருத்துவ பணியை **குருக்கள் பணம் கொடுத்து** வாங்கினர்.

கி.மு. 170ல் இருந்து பெரிய ஏரோது எருசலேமில் பதவி ஏற்ற காலத்தில் இருந்து கி.மு. 37 எருசலேமின் அழிவு வரை 28பேர் **தலைமை குருத்துவ பணியை பணம் கொடுத்து பெற்றுக்கொண்டனர்.**

**அன்னா** கி.பி. 6ம் ஆண்டு முதல் கி. பி. 15ம் ஆண்டு வரை தனது ஐந்து மகன்களுக்கும் கி.பி. 18 முதல் கி.பி. 36 வரை தலைமை குருத்துவ பணியை **தனது மருமகன் காய்பாவுக்கு பணம் கொடுத்து பெற்றார்.** தலைமை குருவாக காய்பா பணியாற்றிய காலத்தில் ஆலய வளாகத்தில் ஆடு, மாடு புறா விற்பனை ஆரம்பிக்கப்பட்டது. அதற்குமுன் கெதிகோன் பள்ளத்தாக்கில் விற்பனை செய்யப்பட்டது. மக்கள் **காணிக்கையாக கொண்டு வரும்** பலி பொருட்கள் **தகுதியற்றவை** என்று குருக்கள் புறக்கணிப்பார்கள். **அதற்கு பதில்** அதிக விலை கொடுத்து **பலி பொருட்கள் வாங்க நேரிட்டது.** 18 வயது கொண்ட **யூத ஆண்கள்** ஆலய வரி செலுத்த வேண்டும். அதற்கு **ரோம கிரேக்க நானயங்கள்** செலுத்த கூடாது. காரணம் அதில் **அரசர்கள் உருவம் பொறிக்கப்பட்டது.** அதற்கு பதில் **அரை சேக்கல் நாணயம்** வரியாக செலுத்த வேண்டும். இதற்கு அதிக கூலி கொடுத்து சேக்கல் வாங்க வேண்டும். இது பெரிய அநீதியாதக்கொள்ளப்பட்டது. ஆகவே **இயேசு சாட்டை கொண்டு அவர்களைவிரட்டி** தேவாலத்தை சுத்தம் செய்தார்.

**மேலே வாசித்த பகுதி** திருநெல்வேலி CSI டையோசின் மாதாந்திர பத்திரிகையான

**நற்போதகம்** என்ற பத்திரிகையில் **தேவாலயத்தில் இயேசு சாட்டை** எடுத்து பண பறிமாற்றம் (MoneyExchange) செய்பவர்களையும், விற்பனை செய்பவர்களையும் தேவ வைராக்கியத்தோடு தான் ஒருவரே ஆட்களை அடித்து விரட்டி, விற்பனை மேசைகளை கவிழ்த்துவிட்டார். தேவனுடைய ஆலயம் **ஜெப வீடாக** இருக்கிறது. அதை **கள்ளர் குகையாக்குகிறீர்கள்** என்று கடிந்து கொண்டார்.

இப்படியாக ஆலய சுத்திகரிப்பை பயப்படாமல் நடத்தினார். பிரதான ஆசாரியர், பரிசேயர் யாரும் இயேசுவை ஒன்றும் செய்ய முடியவில்லை. காரணம் அவர் தங்கள் பதவியை குறுக்கு வழியில் பணம் கொடுத்து **பதவியை** பெற்றவர்கள். அதனால் அவர்கள் இயேசுவின் செயலை தடுக்க முடியவில்லை.

கடந்த **பல வருடங்களாக** திருநெல்வேலி **டையோசிஸ்** இப்படித்தானே இருந்தது! எத்தனை வருடங்கள் **நீதிமன்ற வழக்குகளில்** சிக்கி இப்போதுதான் ஒரு முடிவுக்கு வந்தது. ஆனால் மாறி மாறி நீதிமன்றத்தில் பல ஸ்டே ஆட்ரடர்கள் வாங்கி திருமண்டலத்தின் நிர்வாகம் நடைபெறாமல் ஸ்தம்பிக்க செய்தார்கள்.

முடிவாக **நீதிமன்றமே** ஒரு கட்டத்தில் **சலிப்படைந்து** மிஷனரிகளால் கஷ்டப்பட்டு உருவாக்கிய **சபைகள், கல்லூரிகள்,** விற்பனை வளாகங்கள் யாவற்றையும் **நீதிமன்றமே** தன் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்தது.

திருநெல்வேலி டையோசிஸ்ஸில் அனைத்து **உறவினர்களும்** சேர்ந்த ஒரு கூட்டம் **இரண்டு குழுவாக** பிரிந்து அவர்களுக்குள்ளேயே பேசி ஒருவர் மாற்றி மற்றவர் எலக்ஷனில் **குறுக்கு வழியில்** ஜெயித்து **நிர்வாக பதவிகளை** பெற்றார்கள். **கட்டிட கான்டராக்ட்காரர்** டையோசிஸ்ஸில் பெரும் பணத்தில் பண கொள்ளையடித்து, அதில் ஒரு பகுதி பொருப்பாளர்களுக்கு கமிஷனாக கொடுத்து வந்தார்கள். **கல்லூரி பேராசிரியர்கள்,** ஆசிரியர்கள் பொது வரிசையின்படி தகுதியிருந்தும் அவர்களுக்கு அந்த பதவி கொடுக்காமல், தகுயற்றவர்களிடம் 40 லட்சம் 30 லட்சம் என்று லஞ்ஜம் வாங்கி அந்த பணத்தை பங்கு போட்டுக்கொண்ட செய்தி பல வருடங்களாக மக்களுக்குள் பேசப்பட்டது. சகல தகுதியிருந்தும் பட்டியலில் முதல் பெயராக இருந்தும், லட்சங்கள் கொடுக்காததால் பதவி உயர்வு மறுக்கப்பட்டது.

தன் கவுரவம் பாதிக்கப்பட்டதால் தன் பதவியையும், தன் வேலையையும் ராஜினாமா செய்து அந்த நிலைமையை ஒரு சகோதரி என்னிடம் கூறி **டையோசிஸ்ஸின் சாட்சியில்லா நிர்வாக நிலையை** கூறி அழுதார்கள்.

இரவிலே **மதுபான விருந்து** அதன் மத்தியில்தான் **டையோசிஸ் நிர்வாக திட்டங்களை** உருவாக்குவது தனக்கு **ஓட்டு இடாத ஆயர்களை,** மனைவி ஒருபக்கம், கணவன் தூர இடத்துக்கும் **இட மாற்றம்** செய்ததை குறித்து எத்தனை ஆயர்கள் கூறி கண்ணீர்விட்டார்கள் . அதனால் பிள்ளைகள் படிப்பு பாதிக்கப்பட்டது. எந்த புதிய கமிட்டி வந்தாலும் இதே நிலைதான். என்னை கமிட்டி வெருத்தாலும் **டையோசிஸ் கன்வென்ஷனில் பேச** 3ம் முறையாக என்னை அழைத்து பேச வைத்தார்கள். பிஷப் இல்லாத காலம், கடைசிநாள் கூட்டம் கடன் வாங்கப்பட்ட பிஷப் ஒருவரின் தலைமையில் நான்கு நாள் கூட்டமும் நடந்தது. கடைசி நாள் இரவு டையோசிஸ்ஸின் மன மாற்றத்துக்காக கர்த்தரின் காலை பிடித்து அழுவோம் என்ற கூறி நான் ஜெபித்தபோது மைதானத்தில் எழுந்து நின்று ஜெபித்த பெரும்பாலானவர் கண்ணீர்விட்டு அழுது ஜெபித்ததை நான் அறிந்து தேவனைத் துதித்தேன். ஆனால் அந்த ஜெபத்துக்கு உடனே மாற்றம் வரவில்லை. **நீதிமன்றம் பொருப்பெடுத்து** சில வருடங்கள் **புறமதஸ்தர்** கையில் **ஆயர்கள் சம்பளம் வாங்கிய** கதிகேடு நிகழ்ந்தது.

**கன்னியாகுமரி டையேசிஸ்**

- ☐ இதைப்போலவே **கன்னியாகுமரி டையோசிஸ்சிலும் நீதிமன்றம்** பொருப்பில் எடுத்து வக்கீல்மூலம் **ஆயர்கள் சம்பளம்** வாங்கினார்கள். கன்னியாகுமரி அனைத்து சபைகளும் ஒத்துழைத்தது. கணக்கு வரவு செலவுகளை ஒப்படைத்தது நீதிமன்ற பிரச்சனை சீக்கிரம் முடிவு வந்தது. இப்போது கன்னியாகுமரி டையோசிஸ் அமைதியாக நடக்கிறது. தேர்தெடுக்கப்பட்ட பிஷப்பின் பொருப்பில் ஆசீர்வாதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**திருநெல்வேலியிலும்** நீதிமன்ற **நிர்வாகத்தில்** சுமார் 30 அல்லது 40 ஆடிட்டர்கள் அனைத்து சபைகளின் கணக்கை ஆடிட் செய்தது. ஆனால் **பல சபைகள் கணக்கு ஒப்படைக்க மறுத்தது.** அதனால் நீதிமன்ற நிர்வாகம் தொடர்ந்து சில காலம் **நீடிக்கப்பட்டது.** ஒரு வழியாக நீதிமன்ற நிர்வாகம் முடிவுக்கு வந்தது.

**புது பிஷப் தேர்தெடுக்கப்பட்டார்.** இவரையும் தன் கை பொம்மையாக ஆக்க முயற்சி நடந்தது. ஆனால் சில குழப்பங்கள் நிர்வாகத்தில் நீண்டது. ஜனங்களால் தேர்தெடுக்கப்பட்ட கமிட்டியை யாருக்கும் அதாவது **பிஷப்புகோ,** மாடரேட்டருக்கோ **கலைக்கும் அதிகாரம் இல்லை.** ஆனால் இப்போதைய பிஷப் துணிந்து கமிட்டியை நீக்கினார். அதனால் நீதிமன்றம் **பிஷப் கமிட்டியை கலைத்தது** பற்றிய **தீர்ப்பில்** கமிட்டியை கலைத்தது செல்லாது என்று தீர்ப்பளித்ததோடு பிஷப்புக்கு தன் கண்டனத்தையும் தெரிவித்தது.

- ☐ இதில் மற்றொரு பிரச்சனை உருவானது. தேர்தெடுக்கப்பட்ட **லே-செயலர்** அவர்களுக்கும் **பிஷப்புக்கும்** பழைய காலம் போல் **பிரச்சனைகள் உருவானது.** பிஷப் தன் தவறை சரியாக்கி ஞானமாய் நடந்துகொண்டார். ஆனால் **லே-செயலரை** ஓரம் கட்டினார். லே-செயலர் இல்லாமலே சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

- ☐ இதில் லே-செயலரின் பக்கத்திலும் சில பெலவீனங்கள் இருந்தது. முதலாவது அவர் சொந்த ஊர் திருநெல்வேலியாக இருந்தாலும் அவர் சென்னை டையோசிஸ்ஸில் உள்ள சபையில் அங்கத்தினராக இருந்தார். **ஆதார் கார்ட், ரேஷன் கார்ட், பேன் கார்டு** யாவிலும் சென்னை விலாசம்தான் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அப்படிப்பட்டவர் டையோசிஸ் எலக்‌ஷனில் நின்றிருக்கக்கூடாது. ஆனால் பெரும்பான்மை ஆதரவுடன் **பண பலம் காரணமாக** தேர்தலில் நின்றார், ஜெயித்தார். **பிஷப் அவர்களுக்கும் லே-செயலருக்கும் ஒத்துப்போகவில்லை.** இந்த லே-செயலருக்கு பிரசங்கிக்க தாலந்து உண்டு. சென்னையில் உள்ள பல CSI & ECI சபைகளில் காலை ஆராதனையில் பிரசங்கம செய்வார். பிரசங்கம் செய்ய அழைத்த சபைக்கு லட்சக்கணக்கில் காணிக்கைகளை அள்ளி கொடுப்பார். காரணம் ஏறக்குறைய 10 வியாபார ஸ்தாபனஞ்களுக்கு அதிபர் ஆவர். இவர் ஒரு தொழிலதிபர். பிரசித்திபெற்ற **மூக்குபொடியான T.S.பட்டணம் பொடி** என்ற கம்பெனிக்கும் அதிபர்.



சகோ. **T. ஜெயசிங்**

**புகையிலையில்** பீடி, **சிகரேட்,** உதட்டின்கீழ் வைக்கும் பொடி ஆகியவைகளை உண்டாக்கி தமிழ்நாட்டில் பிரசித்திபெற்ற கம்பெனி என்ற பெயர் பெற்றது.

**புகையிலையில்** தயாரிக்கப்படும் எதுவும் புற்றுநோய் உண்டாக்கும் என்பதை உலகமே எச்சரித்திருக்கிறது. இப்படிப்பட்ட **சாட்சி இல்லா தொழிலில்** கிடைக்கும் பணத்திலிருந்து எத்தனை **கோடி ஊழியத்துக்கு** கொடுத்தாலும் அது ஆசீர்வாதத்தை கொடுக்காது. அந்த வகையில் தான் ஊழியம் செய்ய தகுதியற்றவன் என்பதை அவரே அறிவார். யார் அவரிடம் வந்தாலும் **தலையில் கை வைத்து** நெற்றியில் **சிலுவை போடும்** பழக்கம் இவருக்கு உண்டு.

சில பத்திரிக்கைக்கு இவர் தொடர்ந்து பிரசங்கம் எழுதுவார். ஆனால் தான் லே– செயலாளராக இருக்கும் திருநெல்வேலி டையோசிஸ்ஸின் அதிகார பத்திரிக்கையான **நற்போதகத்தில்** மட்டும் ஒரு செய்தியும் வெளியிடாமல் இவரை ஒதுக்கியே வைத்தனர்.

இந்த நிலையில் குருத்தோலை ஞாயிறு செய்தி நற்போதகம் பத்திரிகையில் வெளிவந்த **தேவாலயம் சுத்திகரிப்பின்** செய்தியில் **டையோசிஸ்ஸின்** கடந்த காலம் – **நிகழ்கால சம்பவங்கள்** இன்னும் மாறாமல் இருப்பதை **நற்போதகம் 4,5ம் பக்க செய்தகளில்** காணப்படுகிறது.

டிக்கன்கள் முழுபட்டம்பெற அந்த காலத்தில் லஞ்ஜம் கொடுத்து விளையாடியதை நான் அறிவேன். அது இப்போதும் கொஞ்ஜம் தலைகாட்டுகிறது. கல்லூரி, ஆசிரியர், புரோபஸர், ஆயர் இடம் மாற்றம் ஆகியவைகளில் **ஆங்காங்கே பணம்** விளையாடுவதாக அறிந்தேன்.

புதிய பிஷப் சீக்கிரமே அவைகளை சரி செய்வார் என்று நம்புகிறேன். ஏறக்குறைய **45 வருடமாக திருநெல்வேலி CSI சபைகளில்** பிரசங்கம் செய்து வருகிற நான் பல விவரங்களை அறிவேன், இப்போதைய பிஷப் அவர்கள் பதவி ஏற்றதும் அவரை **வாழ்த்தி** ரிஜிஸ்டர் தபாலில் கடிதம் எழுதி அவரை மரியாதை நிமித்தம் நேரில் சந்தித்து வாழ்த்தவும், அப்படியே டையோசிஸ்ஸின் நிலையை அவருக்கு எடுத்துரைத்து ஆலோசனை கொடுத்து ஜெபிக்க 20 நிமிடங்கள் நேரம் கேட்டிருந்தேன். இதுவரை அவர் எனக்கு நேரம் கொடுக்க தயங்குகிறார் என்பதை உணர்ந்தேன். ஆனால் அவர் செயல்பாட்டுக்காக கர்த்தரை துதித்து இப்போதும் அவருக்காகவும் நெல்லை டையோசிஸ்காகவும் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்கிறேன்.

நற்போதகத்தில் **தேவாலயத்தில் ராஜா** என்ற தலைப்பில் எழுதியவரை வாழ்த்துகிறேன். புதிய ஏற்பாட்டு ஆரம்ப கால பண வியாபாரங்களையும், **அதே வியாபாரம் இப்போதும் நடந்து கொண்டிருப்பதையும்** ஓரளவு திருமண்டல மக்கள் விளங்கிக்கொள்வார்கள் என்று நம்பலாம்.

அப்படியே **ஆசீர்வாதத் தட்டு** வியாபாரம் **திருமண்டலம் எங்கும்** எல்லா சபைகளிலும் கூடி கூடி வரும் ஒருவித வியாபாரம் ஆகும். **புதிய பிஷப்பும்** நிர்வாகமும், **ஆயர்களும்** நிறுத்த முயன்றால் **ஏழை–பணக்காரன்** வித்தியாசம் மாறும், ஜெபிக்கிறேன், கர்த்தர் நெல்லை திருமண்டலத்தை ஆசீர்வதிப்பாராக.

**தேவன் தங்கியிருக்கும்** நடமாடும் **ஆலயம் ஆகிய நாம்** நமது வாழ்வில் தொலைந்து போன **பரிசுத்தம், பக்தி,** முயற்சி, வாழ்வு (தேவ தியானம், ஜெபம் போன்றவற்றை சீர் படுத்தி ஆன்மீக வாழ்வில் முன்னேறுவோம். 1 கொரி. 3:16ல் சொல்லுகிறபடி **ஒருவன் தேவனுடைய ஆலயத்தை கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார்.** தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாய் இருக்கிறது. **நீங்ளே அந்த ஆலயம்.**

## STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER JAMAKKARAN (FORM IV)

| | | |
|---|---|---|
| 1. Title of the news paper | : | **JAMAKKARAN** |
| 2. Language(s) in which it is published | : | **TAMIL / MALAYALAM** |
| 3. Place of publication | : | 89,Majeeth Street, Old Suramangalam, Salem - 636 005. |
| 4. Periodicity of its publication | : | Monthly |
| 5. Printer's name | : | M.Velu |
| (whether citizen of India) | : | Indian |
| Address | : | P.M.Press 168,Arumuga Nagar, Salem-636 005 |
| 6. Publisher & Editor's name | : | **Dr.M.G.E.PUSHPARAJ** |
| (whether citizen of India) | : | Indian |
| address | | 89,Majeeth Street, Old Suramangalam. Salem-636005 |

I, **Dr. M.G.E.PUSHPARAJ** *hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

Dated : 1- 3-2024
Salem - 636 005

**(Sd.) Dr. M.G.E.PUSHPARAJ**
*Signature of Publisher & Editor*

**MARCH 2024**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription :**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.